மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு இவை விரிவாக்குவதுபற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இப்பொழுது உள்ள சூழ்நிலையில் விரிவாக்குவதில் பல இடர்ப்பாடுகள் நிதி நிலையைப் பொறுத்து இருக்கின்றன. இதில் 50 சதவீதம் மத்திய அரசும் 50 சதவீதம் மாநில அரசும் என்ற அளவில் மொத்தமாக இதற்காக ஆகும் செலவில் பகிர்ந்துகொள்ளப் படுகிறது. ஒன்பது ஆண்டுகளில் மொத்தம் அதற்காக ஆன செலவு ரூ. 69,56,438. இதுவரை மத்திய அரசிடமிருந்து ரூ. 22,62,172 இதற்காக வந்திருக்கிறது. 1972-73ம் ஆண்டில் இதற்கு ஆன செலவு ரூ. 11,74,377 ஆகும். வேறு அலுவலர்கள் நியமிக்கப்பட்டால், அதற்கான செலவை 50 சதவீதம் அளவில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கோரும்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, ஊர்க்காவல் படையில் பணியாற்றுகிறவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது சலுகை அளிக்கிறதா என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களைப் பாராட்டுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்த ஊர்க் காவல் படையில் பெண்கள் பணியாற்றுகிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எந்த எந்த மாவட்டங்களில் இப்பொழுது அதிகமாக இருக்கிறார்கள்? இப்பொழுது ஊர்க்காவல் படையினரைக் கண்காணிக்கும் பொறுப்பை அடிஷனல் சார்ஜில் விடுவதை விட அவர்களுக்கென்று பிரத்தியேகமாக ஒரு டி. எஸ். பி. போடுவது நல்லதல்லவா? அப்படிச் செய்வதானால் எந்த அளவுக்குச் செலவு அதிகமாகும் என்று அரசு பரிசீலனை செய்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது சென்னையில் மாத்திரம் காவல் துறை, கூடுதல் டெபுடி சூபரின்டென்ட் பதவியொன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டு முடிவும் எடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் இந்த பெண்கள் ஊர்க் காவல் படையினர் இருக்கிறார்கள்.

Salem Engineering College.

* 213 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Salem Engineering College has been closed indefinitely in August 1973; and

(*b*) if so, the details thereof ?

1974 சனவரி 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(அ) ஆம்.

(இ) இரண்டு முதுநிலை வகுப்பு மாணவர்கள் வேறு இரு இளநிலை வகுப்பு மாணவர்களுக்கு இடர் விளைவிக்கும் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டமையால் கல்லூரி முதல்வர் அவ்விரு முதுநிலை வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி மாறுவதற்குரிய சான்றிதழ்களை வழங்கினார். கல்லூரி முதல்வரின் இச்செய்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகத்தான் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. போதிய அறிவுரை கூறிய பிறகும் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை ஆதலால் கல்லூரி காலவரையின்றி 20–8–1973 முதல் மூடப்பட்டது. 27–8–1973 அன்று கல்லூரி திறக்கப்பட்டு தற்போது சரிவர இயங்கிவருகிறது.

Law College Hostel.

* 214 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a Law College student died in the Law College Hostel at Madras about the 20th October, 1973; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—(அ) ஆம்.

(இ) சட்டக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்த மாணவர் திரு. நாகராஜன் 19–10–1973ம் நாள் இரவு 9-15 மணியளவில் சட்டக் கல்லூரி விடுதி மாடி உச்சியிலிருந்து கீழே விழுந்து இறந்தார்.

திரு கே. டி. கே. தங்கமணி : விழுந்து இறந்ததாகத்தான் பத்திரிகையிலும் செய்தி வந்தது. என்ன காரணம் என்று ஏதாவது விசாரிக்கப்பட்டதா? மன நோய் காரணமாக நடந்ததா? வேறு ஏதாவது காரணமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவர் அவர்களே, 19–10–1973 இரவு தேர்வுக்காக படிக்க அந்த மாணவர் மூன்றாவது மொட்டை மாடியில் போய்ப் படித்துக்கொண்டிருந்தார். மாடி கைப்பிடிச் சுவரின் மீது உட்கார்ந்திருந்தபோது, அவரையும் அறியாமல் அயர்ந்து தூங்கிவிட்ட காரணத்தால், அங்கிருந்து கீழே விழுந்து விட்டார். கீழே விழுந்த பிறகு கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டு, கொண்டுசெல்லும் வழியில் அவர் இறந்தார். அவருடைய பெற்றோர்களுக்கு இந்த நிலைமை அறிவிக்கப்பட்டு, 20–10–1973 அன்று சவம் அவருடைய பெற்றோர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.